தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 9, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 22, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

நீர்த்தேக்கத் திட்டம்

***10185—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் தோணிமடுவு நீர்த்தேக்கத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 ஏப்ரல் 22

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி கிராமத்தில் தோணிமடுவு பள்ளம் அருகே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசால் ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டமானது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமற்று இருப்பதால், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது கைவிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி ஊராட்சியின் வனப் பகுதியில் ஒரு சிறிய ஆறு ஓடுகிறது. ஆண்டு முழுவதும் அந்த ஆற்றில் தண்ணீர் வருகின்றது. ஆகவே, தோணிமடுவு நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் அந்த இடத்தில் தடுப்பணை கட்டி, தண்ணீரைத் தேக்கி திருப்பினால் கொளத்தூர் ஒன்றியம், அந்தியூர் ஒன்றியம், அம்மாபேட்டை ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும். இந்தத் திட்டத்திற்காக ஏற்கெனவே 2006–2011–ல் அன்றைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும், அன்றைய வனத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. செல்வராஜ் அவர்களும் ஆய்வு செய்து, அந்தத் திட்டத்தில் பயன் இருக்கின்றது; எனவே, அதை நடைமுறைக்குக் கொண்டு வரலாமென்று பேசியிருக்கிறார்கள். அதேபோன்று, தருமபுரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அன்புமணி அவர்களும் பொதுப் பணித் துறை அதிகாரிகளை வனப் பகுதிக்கு அழைத்துச் சென்று, தோணிமடுவு திட்டம் குறித்து ஆய்வு செய்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி என்ன வேண்டுமென்று கேட்டால், உடனே அழகாக நிறைவேற்றித் தரப் போகிறார்கள். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. S. சதாசிவம்: *கேள்விக்கு வருகிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தியூருக்கு வந்து பார்வையிட்டதன் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல்*

2022 ஏப்ரல் 22]

அறிக்கையில் 107–வது பக்கத்தில், "தோணிமடுவுத் திட்டத்தில் தடுப்பணை கட்டி தண்ணீர் தேக்கி, அந்தியூர், கொளத்தூர் போன்ற பகுதிகளுக்கு அந்தத் தண்ணீர் திருப்பப்படும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும் வகையில் உள்ளது. நானும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஆய்வுக்குச் சென்றிருந்தேன். அந்தத் திட்டம் கட்டாயம் சாதகமாக இருக்கின்றது. ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடையும் வகையில் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த ஆண்டே செய்து தருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.*

திரு. S. சதாசிவம்: *ஆமாம். நம்முடைய மூத்த அமைச்சர் காலத்தில், அது பயன்படும் வகையில் தோணிமடுவுத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்து, ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டில் தானியப் பற்றாக்குறை வராமல் இருப்பதற்கு, நீங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கென்ன, தோணிமடுவு திட்டம் கூடாதென்றா எண்ணம்? ஆனால், ஒரு* dam*–யையோ,* check dam*–யையோ கட்ட வேண்டுமானால் சில* procedures *உண்டு. இது இப்போதில்லை; 2016, 2017–லேயே* Assurance Committee *கொடுத்திருக்கிறது.* Assurance Committee *ஆய்வுக்குச் சென்று வந்த பிறகு ஒரு* report *கொடுத்திருக்கிறது. அந்த* report*–லும் சரிவரவில்லை. சென்றமுறை நீங்கள் என்னிடம் சொன்னீர்கள். அதற்குப் பிறகு நான் எப்படி முடியும் என்பதற்காக ஒரு* investigation *செய்து பார்த்தேன்.* Dam *இல்லையென்றால்கூட, ஒரு* check dam*–ஆவது கட்டலாமா அப்படியென்றுகூட பார்த்தேன். அதற்கும் அது ஒத்துவரவில்லை. காரணம், அங்கே கிட்டத்தட்ட 200 ஏக்கர்* forest land *இருக்கிறது. அந்த 200 ஏக்கருக்கும் நாம்* forest*–க்கு 400 ஏக்கர்* land *கொடுக்க வேண்டும். அதற்குமேல் இந்த நிலம் வேறு*

கொடுக்க வேண்டும். பணம் எவ்வளவு செலவாகுமென்றால் இந்த நேரத்தில் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்குமேல் செலவாகும். ஆகையினால், இவ்வளவு செலவு செய்து, வழக்கமாகச் சொல்வோமே, CLA report, என்னவென்று பார்த்தீர்களென்றால், ஒரு ரூபாய்க்கு இதனுடைய return எவ்வளவென்றால் 7 பைசாதான் திருப்பி வருகிறது. ஆகையினால் நான் சொன்னாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னாலும் சரி; அது CLA report-க்குப் போகும்போது economically not viable என்று சொல்லிவிட்டு திருப்பி அனுப்பிவிடுவார்கள். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆதங்கம் புரிகிறது; தொகுதி மக்களின் எண்ணமும் எனக்குப் புரிகிறது; செய்ய வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு இருக்கிறது. எனவே, சுமார் 135 மில்லியன் கன அடி தண்ணீர் கொள்ளளவு கொண்ட dam தான். அது ஒன்றும் பெரிய dam கிடையாது. ஆகையினால், அங்கே ஒரு check dam கட்ட முடியுமா என்பதை இன்னொரு முறை try செய்து பார்க்கலாம்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். அதை மறுபரிசீலனை செய்வீர்களா என்று சுருக்கமாகக் கேட்டு, அமருங்கள்.

திரு. S. சதாசிவம்: நீங்கள் ஒரு மூத்த அமைச்சர்; நீங்கள் செய்வீர்கள் என்று சொல்லித்தான், இன்றைக்கு நான் இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்டிருக்கிறேன். இப்போது உங்கள் துறையில் அதை ஆய்வு செய்து, நிலத்தை அளவு செய்வதற்காக ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். வனத் துறையும் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிப்பது, அந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். 5 மாவட்டங்களில் தானியப் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க வேண்டும். அந்த மக்களைக் காப்பாற்றுவதில் நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப்போல நினைக்கிறேன்; புகழ்ந்து பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள்; மன்னிக்கவும். புகழ்ந்து பேசக் கூடாது. காரியம் நடக்க வேண்டும். (குறுக்கீடுகள்) புகழ்ந்து பேசக் கூடாது. காரியம் நடக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சதாசிவம், இப்போது ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது; மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேள்வியைக் கேளுங்கள்.

2022 ஏப்ரல் 22]

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அதாவது 16–11–2021–ல் மேட்டூர் அணை நிரம்பி உபரி நீர் வெளியேறியதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இந்தத் தண்ணீரைத் திறந்து விடுங்கள் என்று கோரிக்கை வைத்தோம். உடனடியாக மாண்புமிகு மூத்த அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களை மேட்டூருக்கு அனுப்பி, அங்கே அவர்கள் வருகை தந்தபோது அவருக்கு சிறிது உடல்நலக் குறைவாக இருந்தது, அந்தச் சூழ்நிலையில்கூட மேட்டூருக்கு வந்து நீரேற்ற முறையில், பாதியளவு வேலை முடியவில்லை; முடியவில்லையென்றாலும்கூட, மக்களுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களே வந்து, திப்பம்பட்டியில் தண்ணீர் திறந்துவிட்டு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது கேள்வி என்ன? உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? இன்னொரு தடவை தண்ணீர் திறக்க வேண்டுமா அல்லது உங்களுக்கு அணை கட்ட வேண்டுமா? (சிரிப்பு) திரு. சதாசிவம், கேள்வி என்ன?*

திரு. S. சதாசிவம்: *காளிப்பட்டி ஏரிக்கு நமது மூத்த அமைச்சர் அவர்கள் வந்தார்கள் என்பதை நான் சொல்கின்றேன். காளிப்பட்டி ஏரிக்கு வந்து உபரி தண்ணீரைத் திறக்கும்போது, அவ்வளவு தண்ணீரை இந்த வறட்சிக் காலத்திலே திறக்கிறோமே என்று அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி என்று பார்க்காமலும், ஆளுங்கட்சி என்று பார்க்காமலும் மாண்புமிகு மூத்த அமைச்சர் அவர்களை அனுப்பி, அந்தத் தண்ணீரை திறந்துவிட்டு அந்த வறட்சியான ஏரியை நிரப்பினார்கள். அப்போது அவர் அங்கே பூ போடும்போது, அவரது முகம் மகிழ்ச்சியாக இருந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *அவர் விவசாயக் குடும்பத்தை சார்ந்தவர் என்பதால், அவர் அதில் பூ போடும்போது மகிழ்ச்சியாக இருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பியதால் திட்டம்*

வேகமாக நடைபெற்றது. அந்தத் தண்ணீரில் பூவைப் போடும்போது மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களின் முகம், ஏரி நிரம்புகிறது என்று மலர்ச்சியாக இருந்தது. அவருடைய முகத்தை பார்க்கும்போது அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. திட்டத்தைத் தொடங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் உபரி நீர்த் திட்டத்தில், விதியை மாற்றி ஆண்டொன்றுக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீரை சேலம் மாவட்டத்திற்கு எங்கள் தொகுதிக்குக் கொடுங்கள். நீங்களெல்லாம் எந்தக் கட்சியென்று பார்க்காமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மூத்த அமைச்சர் அவர்களும் ஆண்டொன்றுக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீரை எங்கள் தொகுதி மக்களுக்குக் கொடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தத் தொகுதியின்பால் இருக்கிற பற்றின் காரணமாக, அவருடைய ஆதங்கம் எனக்குப் புரிகிறது. அவர் ஒரு குடியானவர்; நானும் ஒரு குடியானவன். ஆகையினால், நிலத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்ற அடிப்படையில் உங்கள் மனநிலையை நான் உணர்ந்திருக்கிறேன். என்ன செய்வது? சென்ற வருடம் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, மறுபடியும்* review *செய்வதற்காக ஒரு* team *அமைத்திருக்கிறேன். அதனுடைய பதிலறிக்கை வரட்டும். எந்த அளவிற்கு முடிகின்றதோ அந்த அளவிற்குப் பார்த்து, ஏதாவது செய்வதற்கு முடியுமானால் செய்யலாம். ஒரேயொரு வரியில் சொல்லிவிடலாம். நியாயமாக, இது நடக்காது என்று சொல்லிவிடலாம். இருந்தாலும், அவர்களுக்கு மன உளைச்சல் இருக்கக் கூடாது. இந்த அரசு உங்களுடைய கோரிக்கை நிறைவேறுகிற வரையில் முயற்சிகளைத் தொடர்ந்து எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பெரியகுளம்*

2022 ஏப்ரல் 22]

நீர்த்தேக்கம் சுமார் 63 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதுதான் பெரிய நீர்த்தேக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதைச் சரி செய்ய வேண்டும். மணவாளக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பெரியகுளம் நீர்த்தேக்கம் பராமரிக்கப்படவில்லை. அதனுடைய side–*களை எல்லாம் கட்டி* proper *ஆக வைக்கவில்லை. அங்கே நெற்பயிர் விவசாயம் செய்யக்கூடிய பத்தாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் அதை நம்பி இருக்கின்றனர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்ன என்பதை சுருக்கமாகக் கேட்கவும்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *பத்தாயிரத்திற்கும் அதிகமான நெற்பயிர் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *ஆகவே, அந்தக் குளத்தைச் சரி செய்து அதிலே நீரின் கொள்ளளவு முழுமையாக இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதை* mini dam *ஆகக்கூட கொண்டு வரலாம். ஏற்கெனவே உங்களிடம்* request *வைத்திருக்கிறேன். அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தக் குளத்தைப் பார்வையிட்டிருக்கின்றேன். எனவே அதனுடைய நிலைமை எனக்குத் தெரியும். விரைவில் அதுகுறித்து அதிகாரிகளுடன் கலந்துபேசி, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சின்ன வயதிலிருந்து கேள்விப்பட்டது நந்தன் வாய்க்கால்*

திட்டம். நந்தன் வாய்க்கால் திட்டம், சாத்தனூர் அணையின் மேல் பகுதியிலிருந்து நீர் எடுத்து, செங்கம் சட்டமன்றத் தொகுதி திருவண்ணாமலையில் இருக்கின்ற சமுத்திரம் ஏரியை நிரப்புவதாக திட்டம் இருந்தது. 45 ஆண்டுகளுக்குப் பின்னர் நந்தன் வாய்க்கால் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதாகக் கடந்த ஆட்சியில் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்திலே இது மட்டும் விடுபட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் இணைத்து, சாத்தனூர் அணையின் மேல்பக்கம் கால்வாய் அமைத்து திருவண்ணாமலை குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தன் கால்வாய் திட்டம் என்பது இப்பொழுது அல்ல, நீண்ட நெடுங்காலமாக 1952 ஆம் ஆண்டு திரு. A. கோவிந்தசாமி அவர்கள் அப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது அதுகுறித்துப் பேசினார். அதற்குப் பிறகு தலைவர் அவர்கள், நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபொழுது, "A.G. அடிக்கடி கேட்பார் அதைப் பாருய்யா" என்று சொல்வார்கள். இப்பொழுது பனைமரத்து ஏரி வரையில் அந்தத் திட்டத்தைக் கொண்டு போயிருக்கிறோம். அடுத்து தொடர்ந்து அந்த முழு நீளத்திற்கும் கால்வாய் வெட்டி. தளபதியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்குள் நந்தன் கால்வாய் முழுவதும் செப்பனிட்டுத் தரப்படும் என்ற உறுதியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். என்னுடைய அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாம்பட்டி ஊராட்சி, குமரன் அணைக்கட்டு, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கடந்த 2020–2021 ஆம் ஆண்டு முன்னாள் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பூமி பூஜை போடப்பட்டு 10 சதவிகித வேலை முடிக்கப்பட்டதாகத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். அந்தப் பணி நடைபெறவில்லை.

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து விவசாய மக்களின் நலன் கருதி அந்தப் பணியைத் துவக்கிட நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர், அதுகுறித்து எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியிலுள்ள வடக்கு பொய்கைநல்லூர், தெற்கு பொய்கைநல்லூர் ஆகிய கிராமங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் உட்புகுந்து அங்குள்ள மக்களுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது; விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இரு இடங்களிலும் தடுப்பணைகள் கட்டி கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தஞ்சை மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் இப்பொழுது கடல் நீர் உட்புகுவது சர்வசாதாரணமாகிவிட்டது. கொள்ளிடத்திலேகூட 40 கிலோ மீட்டர் அளவுக்கு உப்புத் தண்ணீர் உள்ளே வந்துவிட்டது. மக்கள் கஷ்டப்படத்தான் செய்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அப்படி 37 இடங்களில் கடல் நீர் வருகிறது. இப்பொழுது எல்லாவற்றையும் முடித்துவிட்டோம். அடைப்பாறு, அய்யனாறு, அரிச்சந்திரா நதி, பாமினி ஆகிய ஆறுகளின் பகுதிகளில்தான் இந்தப் பணிகள் செய்யப்படவில்லை. அந்த* work–*ஐ* contract *எடுத்தவர் செய்யாமலிருக்கிறார். மற்ற இடங்களிலெல்லாம் அந்தப் பணிகளை முடித்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரும் அதில் சேர்த்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே முதலில் கட்டப்பட்டுள்ள கொடியாளம் நீர்தேக்கத் திட்டத்திற்கு கடந்த ஆட்சியில் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஆட்சியில் திட்ட மதிப்பீடு போடப்பட்டு, தங்களுடைய துறையிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *என்ன?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே முதல் அணையாக இருக்கின்ற கொடியாளம் நீர்தேக்கத் திட்டத்திலிருந்து அங்கே நீர். . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தென்பெண்ணை ஆற்றிலுள்ள கொடியாளம்.*

திரு. கே.பி. முனுசாமி: *கொடியாளம் நீர்தேக்கத் திட்டத்திலிருந்து நீரேற்றியின் மூலமாக தண்ணீர் கொண்டுவர திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கடந்த ஆட்சியில் நிலுவையில் இருந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Lift Irrigation *பற்றி கேட்கிறார்கள். அதுதானே?*

திரு. கே.பி. முனுசாமி: *ஆமாம்,* lift irrigation *திட்டம். அதை நிறைவேற்றினால் ஓசூர் தொகுதி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள 30 ஏரிகளுக்குப் பாசன வசதி ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் டெண்டர் விடப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் ஊருக்குப் போகின்ற தண்ணீருக்கான ஒரு பெரிய திட்டத்தைத் துவக்கி, முடித்திருக்கிறோம். அதுவொரு பெரிய திட்டம். திட்ட மதிப்பீடு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல்; அதை முடித்திருக்கிறோம். இன்னும் துவக்க விழா நடைபெறவில்லை. தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அடுத்த ஒரு திட்டம் பற்றி கேட்டிருக்கிறார். அதுபற்றியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து, என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிவிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***544—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் செயல்பட்டு வரும் கட்டக்குடி முழு நேர நியாய விலைக் கடை 769 குடும்ப அட்டைகளுடன் T1527, கட்டக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச்